வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 4379/ஆ4/2025 நாள்: 25.09.2025

| | | |
|---|---|---|
| பொருள் | : | தேர்வுகள் –வேலூர் மாவட்டம் –மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு –2025–2026 –மாணவர்கள் பெயர் பட்டியல் (Nominal Roll ) பதிவிறக்கம் செய்தல் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ள மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு –தெரிவித்தல் –சார்பு |
| பார்வை | : | அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.012770/ எச்.1/2025 நாள் 25.09.2025 |

===============

பார்வையில் காணும் அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின் படி, வேலூர் மாவட்டம், மார்ச்/ஏப்ரல் –2025 , மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதிய பள்ளி மாணவர்களின் பெயர்பட்டியலினை (Nominal Roll ) அடிப்படையாகக் கொண்டு, நடைப்பெறவுள்ள மார்ச் 2025–20256 மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்க்கான பள்ளி மாணவர்களின் பெயர்பட்டியல் திருத்தங்கள் மேற்கொள்வது தொடர்பாக பின்வரும் அறிவுரைகளை பின்பற்றி செயல்படுமாறு அனைத்து வகை மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளின் முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அனைத்து வகை மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் 25.09.2025 பிற்பகல் முதல் www.dgeapp.tnschools.gov.in என்ற இணையதள முகவரிக்கு சென்று, தங்கள் பள்ளிக்கு அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் வழங்கப்பட்டுள்ள USER ID மற்றும் Password–ஐ பயன்படுத்தி, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதவுள்ள தங்களது பள்ளி மாணவர்களின் நிரந்தரப் பதிவெண், பெயர், பிறந்த தேதி , பாடத் தொகுதி உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய பட்டியலை பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும் .

1. பதிவிறக்கம் செய்யப்பட்ட மாணவர் விவரம் அடங்கிய பட்டியலில், தங்கள் பள்ளியில் +2 பயிலும் மாணவர்களது பெயர் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் (Initial and Spelling Mistake only ) புகைப்படம் மற்றும் பிறந்த தேதி ஆகியவற்றில் திருத்தங்கள் இருப்பின், **அதன் விவரங்களை பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழின் நகலுடன் இணைத்து 03.10.2025 தேதிக்குள் வேலூர், கல்புதூர் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்** அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் அடிப்படையில் மட்டுமே மாணவரது பெயர் மற்றும் பிறந்த தேதியில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

2. பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வெழுதிய பின்னர், அரசிதழில் (Gazette) பதிவு செய்து பெயர் மாற்றம் செய்த மாணாக்கர்களுக்கு மட்டும், பத்தாம் வகுப்பு சான்றிதழில் உள்ளவாறு இல்லாமல் அரசிதழில் உள்ளவாறு பெயரை மாற்றம் செய்துக் கொள்ள அனுமதிக்கப்படும் . அவ்வகை மாணாக்கரது பெயர் திருத்தம் கோர அரசிதழின் நகலை கண்டிப்பாக வேலூர் மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.
3. மாணவரது பெயர்ப்பட்டியலில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு அம்மாணவரின் பெயர்ப்பட்டியல் பக்கத்தில் திருத்தங்கள் குறித்த விவரங்கள் குறிப்பிட்டு தலைமையாசிரியரின் கையொப்பமிட்டு சமர்ப்பிக்கவேண்டும்.
4. ஒரு பள்ளியில் மேல்நிலை முதலாமாண்டு (+1) பயின்று, மார்ச் –2025 –ல் மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வெழுதிய பின்னர், மாற்றுச் சான்றிதழ் பெற்று வேறொரு பள்ளியில் பன்னிரெண்டாம் வகுப்பில் (+2) சேர்ந்து பயிலும் மாணவரது பெயரை, தற்போது பன்னிரெண்டாம் வகுப்பு (+2) பயிலும் பள்ளியில் மாணாக்கர் பெயர் பட்டியலில் சேர்க்க இயலும். அவ்வாறு தற்போது +2 பயிலும் பள்ளியின் பெயர்பட்டியலில் சேர்க்க வேண்டுமெனில், +1 மதிப்பெண் பட்டியல் நகல், மாற்றுச் சான்றிதழ் நகல் உள்ளிட்ட ஆவணங்களை வேலூர் ,மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். ஆனால், அம்மாணவர் ஏற்கனவே <u>+1 பயின்று தேர்வெழுதிய பாடத்தொகுப்பு, பயிற்று மொழி மற்றும் மொழிப்பாடம் ஆகியவற்றில் எக்காரணம் கொண்டும் மாற்றம் செய்ய இயலாது</u> என தெரிவிக்கப்படுகிறது.
5. மேல்நிலை முதலாமாண்டு பயின்று +1 பொதுத்தேர்வெழுதிய பள்ளி மாணாக்கரது பெயரை பள்ளி மாற்றுச் சான்றிதழ் வழங்கப்படாத நிலையில் +2 பொதுத் தேர்வுக்கான பெயர் பட்டியலில் இருந்து எக்காரணம் கொண்டும் நீக்கம் (Deletion ) செய்திட அனுமதி வழங்கப்படமாட்டாது .

    பள்ளியில் மாற்றுச் சான்றிதழ் வழங்காமல் நீண்ட காலம் விடுப்பில் இருக்கும் மாணாக்கரது பெயரை , பெயர்பட்டியலில் இருந்து நீக்கமும் (Deletion ) செய்யக்கூடாது. எனினும் பள்ளி மாற்றுச் சான்றிதழ் வழங்கப்படாத /நீண்ட காலம் விடுப்பில் இருக்கும் மாணாக்கர் பெயரை இரண்டாமாண்டு பெயர் பட்டியலில் கட்டாயம் நீக்கம் செய்ய வேண்டுமெனில் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் ஒப்புதல் கடிதம் பெற்று வேலூர், கல்புதூர் அரசு அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநரிடம் சமர்ப்பிக்க வேண்டும் .

6. 2024–2025 ஆம் கல்வியாண்டிற்கு முன்னர் மேல்நிலை முதலாமாண்டு பயின்று பொதுத் தேர்வெழுதி தேர்ச்சி பெற்று / பெறாமல் இடைநின்று தற்போது மீண்டும் பள்ளியில் சேர்ந்து மேல்நிலை இரண்டாமாண்டு (+2) பயின்று வரும் மாணவர்களின் பெயரினை 2025–2026 கல்வியாண்டில் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கான பெயர்பட்டியலில் சேர்த்திட தலைமையாசிரியர்கள் வேலூர் மாவட்ட உதவி இயக்குநர் அலுவலகத்தில், அம்மாணாக்கரது மேல்நிலை முதலாமாண்டு (+1) மதிப்பெண் பட்டியல் (statement of marks), தற்போது +2 பயிலும் பள்ளியின் என், பள்ளித் தலைமையாசிரின் பரிந்துரைக் கடிதத்துடன் 03.10.2025 – க்குள் சமர்பிக்க வேண்டும் .

7. மேலும் வேறு மாநிலத்தில் பதினோராம் வகுப்பு பயின்று தேர்ச்சி பெற்ற மாணவர்கள், மத்திய இடைநிலைக் கல்வி வாரிய (CBSE ) பாடத்திட்டத்தில் பதினோராம் வகுப்பு பயின்று தேர்ச்சி பெற்ற மாணவர்கள் தற்போது தங்கள் ஆளுகைக்குட்பட்ட பள்ளிகளில் மேல்நிலை இரண்டாமாண்டு (+2) பயின்றால் அம்மாணவர்களின் பெயரினை 2025–2026 மேல்நிலை இரண்டாமாண்டு பெயர் பட்டியலில் சேர்த்திட தலைமையாசிரியர்கள்

(1) வேலூர் மாவட்டக் கல்வி அலுவலரிடம் (இடைநிலை) பெறப்பட்ட இணைச் சான்றிதழ் (equivalent certificate)

(2 ) பள்ளிக்கல்வி இயக்குநர்/தனியார் பள்ளிகள் இயக்குநர் அவர்களின் அனுமதி ஆணை

(3) புகைப்படத்துடன் கூடிய உறுதிமொழி படிவம்

ஆகியவற்றை 03.10.2025 –க்குள் சமர்ப்பிக்க வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

//ஓம்.சு.தயாளன் //
முதன்மைக்கல்விஅலுவலர்(பொ)
வேலூர்

பெறுநர்,

அனைத்து வகை அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளின் முதல்வர்கள் வேலூர் மாவட்டம் தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது .

நகல்

1. மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை/தனியார் பள்ளிகள் ) வேலூர், அவர்களுக்கு தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.
2. மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி ) வேலூர்,அவர்களுக்கு தகவலுக்காக தெரிவிக்கலாகிறது.
3. மாவட்ட அரசு தேர்வுகள் உதவி இயக்குநர் அவர்களுக்கு தகவலின் பொருட்டு கனிவுடன் அனுப்பிவைக்கப்படுகிறது.